# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | **: JUDICIAL MAGISTRATE NO.II COURT, DHARMAPURI.** |
| **Date** | **: 16.12.2020** |
| **Calender** | **: CC.No:**195/2016 |
| **Ranking of witness** | **: PW.7** |
| **Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.12.2020**

CC. No: 195/2016
Dated :16.12.2020
அ.சா. 7 பி. அமுதா( காவல் உதவி ஆய்வாளர்)
முதல் விசாரணை

நான் தற்போது நாமக்கல் மாவட்டம் வேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக அயர் பணியாக சிலை திருட்டு தடுப்பு பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.08.2014ம் தேதி தருமபுரி மாவட்ட குற்றப்பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது தருமபுரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவகத்தில் இருந்து தபால் மூலம் தரப்ட்ட எஸ், ரவிசந்திரன் அஞ்சல் ஆய்வாளர் அவர்கள் கொடுத்த புகாரின் பேரில் தருமபுரி மாவட்ட குற்றப்பிரிவு குற்ற எண் 34/2014 சட்டப்பிரிவு 408, 477( A) வழக்கு பதிவு செய்து சம்பவம் இடம் சென்று சாட்சிகள் 1, எஸ், ரவிசந்திரன், 2 பி, முருகேசன், திருமதி. சக்தி, திரு. மாது ஆகியோர்களை 08.08.2014ந் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வாதி கொடுத்த ஆவணங்களை பரிசீலனை செய்து சாட்சிகளின் வாக்குமுலத்தின் அடிப்படையில் சம்பவம் உண்மை என்பதால் எதிரி இளையராஜாவை 08.08.2014ந் தேதி பாப்பிரெட்டிபட்டி காளிபேட்டை பஸ் நிறுத்ததில் நின்று இருந்தவரை விசாரித்து கைது காரணத்தை எடுத்து கூறி 15.30 மணிக்கு கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற அடைப்பு காவலுக்கு அனுப்பி வைத்தேன். சாட்சி மகாதேவன் செந்தில் வேலன் 09.08.2014ந் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். புகார்தாரர் ஆஜர் செய்த ஆவணங்களை 30.08.2014ந் தேதி படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். எதிரி மீது இறுதியாக 07.01.2015ந்தேதி இ.த.ச 408, 477(A) –ன் படி குற்றபத்திரிக்கை தாக்கல் செய்தேன். முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 12 ஆகும். படிவம் 95 அ.த.சா.ஆ 13 ஆகும்

<u>எதிரி தரப்பில் கு.வி.</u>

வழக்கு புகார் காவல் கண்காணிப்பாரிடம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த புகார் மாவட்ட குற்றபிரிவுக்கு அனுப்பப்ட்டதால் நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் குற்ற நிகழ்வு நாள் 03.03.2008 முதல் 20.06.2016 வரை போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் புகார் கொடுத்த தேதி 08.08.2014 என்றால் சரிதான். 2 வருடங்கள் முடிந்து தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். காலதாமத்திற்கு என்ன காரணம் என்று எந்த வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்த ரவிசந்திரன் என்பவர் இது தொடர்பாக அதிகாரம் பெற்றவரா என்பது குறித்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகாதாரருக்கு உயர் அதிகாரிகள் புகார் கொடுப்பதற்கு அனுமதி கடிதம் கொடுத்தார்களாள என்று பெற்று நான் இந்த வழக்கில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் சக்தி மற்றும் மாது ஆகியோர் அஞ்சல கணக்கில் தொகை வரவு சம்மந்தமாக ஏற்பட்ட குளறுபடி சம்மந்தமாகதான் இந்த புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சக்தி மற்றும் மாது நேரடியாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்மந்தப்பட்ட அஞ்சலக போஸ்டுமாஸ்டர் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்மந்தப்பட்ட அஞ்சலகத்திற்கு பண குறைபாடுகள் ஏதேனும் ஏற்பட்டால் சம்மந்தப்பட்ட போஸ்ட்டுமாஸ்டார்தான் காரணம் என்றால் சரிதான். அன்றாட கணக்கு வழக்குகளை எதிரி போன்ற அலுவலர்கள் போஸ்ட்மாஸ்டரிடம் தினசரி ஒப்படைத்துவிடுவார்கள் என்றால் சரிதான். அவ்வாறு

உண்மையில் தினசரி வரவு செலவில் அன்றைய தேதியில் தெரிந்திருக்கும் என்றாலும் அப்போது போஸ்மாஸ்டர் புகார் கொடுத்திருக்காலம் என்றால் சரியல்ல. வருடாந்திர ஆய்வு நடைபெறவில்லை. பொது ஆய்வு செய்யும்பொழுதுதான் குறைபாடு கண்டுபிடித்தார்கள். வருடாந்திர ஆய்வு நடைபெற்றதாக சம்மந்தப்பட்ட அலுவலரே ஒப்புக்கொண்டடார் என்றாலும் அதை மறைந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதில் மேற்படி அஞ்சலகத்தில் பணியிலிருந்து மாற்றம் செய்யப்பட்டு 2 ஆண்டுகள் கழித்து தான் இந்த பபுகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எதிரி பணியிட மாற்றம் சென்ற பிறகு வேறு நபர்கள் யாரேனும் ஆவணங்களை பொய்யா மாற்றி தயாரித்து இருக்காலம் என்றாலும் அதை நான் முறையாக புலன் விசாரணை செய்து கண்டுபிடிக்காமல் எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அன்றை தினம் பணியில் இருந்த நபர்களில் போஸ்மா'ஸ்டரை தவிர வேறு நபர்களை நான் சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். பணியில் இருந்த மற்ற நபர்களை விசாரித்திருந்தால் சரியான காரணம் தெரியும் என்று நான் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சக்தி மற்றும் மாது ஆகியோர்கள் பஸ் புத்தகத்தில் அன்றை தினம் வரவு வைத்து கொடுத்த கையெழுத்தும் சுருக்கொப்பமும் எதிரியுடைதுதானா என்று சம்மந்தப்பட்ட கையெழுத்து நிருபுணர்களிடம் மாதிரிகளை அனுப்பி கருத்து பெறவில்லை என்று சொன்னால் எதிரி தனது கையெழுத்து என்று ஒப்புக்கொண்டதால் அவ்வாறு செய்யவில்லை, எதிரி என் முன்னிலையில் எவ்வித ஒப்புதல் வாக்குமூலமோ இந்த குற்றத்தை நான் செய்ததாகவோ ஒப்புக்கொண்டு வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அஞ்சல் ஆய்வாளரிடம் அவ்வாறு வாக்குமூலம் எதிரி கொடுத்தாக சொன்னார். எதிரி அதே அலுவகத்தில் பணிபுரிந்து போதிய சம்பளம் பெறுகிறார் என்றாலும் 500,1000 கையாடல் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. அஞ்சலக அதிகாரிகள் கணக்கு வழக்கு குறைபாடுகளை எதிரி மீது திணிப்பதற்காக இந்த புகாரை கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிரி தற்போதும் அஞ்சல் துறையிலேயே தான் பணிபுரிந்து வருகிறார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அதே போல் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி சம்மந்தப்பட்ட அலுவலகத்தில் 5 ஆண்டுகள் பணி செய்து அந்த கணக்கு வழக்குகளை எதிரி வேறு அலுவலகத்திற்கு மாற்றம் செய்தபிறகு தணிக்கை செய்து 2 ஆண்டுகள் கழித்து கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடுகளை வைத்து மோசடியாக பொய் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொக்கவில்லை என்றாலும் அவ்வாறு அஞ்சல அலுவரிடம் கொடுக்கப்பட்டதாக கூறுவது மீண்டும் எதிரிக்கு வேலை கொடுப்பதாக ஆசை வார்த்தை கூறி பெறப்பட்டது என்றாலும் சரியல்ல. சாட்சிகளின் வாக்குமூலங்களை நானே தட்டச்சு செய்தேன். அவ்வாறு வழக்கில் சொல்லப்பட்டதா என்றால் இல்லை. எதிரி எந்த குற்றமும் செய்யவில்லை என்றாலும் சாதாரண கணக்கு குறைபாடுகளை பெரிதுபடுத்தி இந்த புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரி குற்றமற்றவர் என்பதாலுதான் அந்த அஞ்சலக துறையில் பணி கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைறெவில்லை என்றாலும் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், சம்பவ இடம் செல்லாமல் வழக்கு ஆவணங்கள் அனைத்தும்

காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

மேற்படி சாட்சியம் திறந்த நீதிமன்றத்தில் என்னால் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு எனது முன்னிலையில் கையொப்பம் பெறப்பட்டது.

ஒம்/ஜி.ரகோத்தமன்,எம்.ஏ.,எல்.எல்.பி.,
நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2
தருமபுரி.